பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 04 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இலங்கை தமிழர் நலனில் இந்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**2.** புதுதில்லி வந்துள்ள தென்கொரிய அதிபர் திரு. லீ ஜே மியுங் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேச உள்ளார்.

**3.** சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள மேற்குவங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

**4.** இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்த நேரடிப் பேச்சுக்கள் இன்று மீண்டும் தொடங்க உள்ளது.

**5.** ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி **1-0** என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இலங்கை தமிழர் நலனில் இந்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவரை நேற்று அந்நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ்ச் சமூகத் தலைவர்கள் மற்றும் இந்திய வம்சாவளி தலைவர்கள் சந்தித்துப் பேசினர்.

கொழும்பில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது இலங்கை தமிழர்களுக்காக இந்திய அரசு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வீட்டு வசதி திட்டங்கள் மற்றும் டிட்வா புயல் மறுசீரமைப்புப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இலங்கை தமிழர் முன்னேற்றத்திலும், அவர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை அமைத்து தருவதிலும் இந்தியா எப்போதும் துணையாக இருக்கும் என்று தமிழ்ச் சமூகத் தலைவர்களிடம் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

இலங்கை அதிபர் திரு. அநுர குமார திசநாயக மற்றும் பிரதமர் திருமதி ஹரினி அமர சூரியா ஆகியோரை குடியரசு துணைத்தலைவர் சந்தித்து விரிவாக பேச்சு நடத்தினார்.

இலங்கையின் நீண்டகால நலன் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என்று அவர்களிடம் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உறுதியளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள தென்கொரிய அதிபர் திரு. லீ ஜே மியுங் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேச உள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் கப்பல் கட்டுமானம், வர்த்தகம், முதலீடுகள், செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளனர்.

தென்கொரிய அதிபர் திரு. லீ ஜே மியுங், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சந்தித்து பேச உள்ளார்.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர், நேற்று புதுதில்லியில் தென்கொரிய அதிபரைச் சந்தித்துப் பேசினார்.

பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் தென்கொரிய அதிபர் கொண்டுள்ள அர்ப்பணிப்பை டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டினார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய கட்சித்தலைவர்கள் அம்மாநிலத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபியின் மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடி, நேற்று அம்மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

மகளிரின் பாதுகாப்பு, கண்ணியம் ஆகியவற்றுக்கு பிஜேபி முன்னுரிமை வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டமன்ற அமைப்புகளில் அதிகப்படியான மகளிர் நுழைவதைத் திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தடுத்துவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மமதா பானர்ஜி, பர்தமான் கிழக்கு மாவட்டத்தில் கல்னா என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

மாநிலத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால், திரிணாமுல் அரசு அறிமுகப்படுத்திய அனைத்து நலத்திட்ட உதவிகள் நிறுத்தப்பட்டுவிடும் என்று அச்சம் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2023ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போதிலும்  அதை ஏன் மத்திய அரசு உடனடியாக அமல்படுத்தவில்லை என்றும் செல்வி மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ், இடதுசாரிகள் மற்றும் பிற கட்சிகளும் மேற்குவங்கம் முழுவதும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இம்மாநிலத்தில் வரும் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<>>>>

இனி தேர்தல் களம்…

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 193 செகண்ட்ஸ்)

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்த நேரடிப் பேச்சுக்கள் இன்று மீண்டும் தொடங்க உள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக இந்திய உயர்மட்டக் குழு வாஷிங்டன் சென்றுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக காணொளி வாயிலாக நடைபெற்று வந்த ஆலோசனைகளுக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் முதல் நேரடி சந்திப்பு இதுவாகும்.

திரு. தர்ப்பண் ஜெயின் தலைமையிலான இந்தியக் குழுவில் வர்த்தகம், சுங்கம் மற்றும் வெளியுறவு அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

ஹோர்முஸ் ஜலசந்தி அருகே அமெரிக்க கடற்படையின் முற்றுகையை மீற முயன்ற ஈரானியக் கொடி ஏந்திய சரக்குக் கப்பலை

அமெரிக்கா வலுக்கட்டாயமாக பறிமுதல் செய்துள்ளதாக அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஓமன் வளைகுடாவில் அமெரிக்க கடற்படையின் வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்புக் கப்பல் மூலம் அந்தச் சரக்குக் கப்பலுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும், ஆனால் அது எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தபோது இடை மறிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதாக திரு. ட்ரம்ப் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'டூஸ்கா' என்று பெயரிடப்பட்ட அந்தச் சரக்குக் கப்பல் தற்போது அமெரிக்க கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை கண்டித்துள்ள ஈரான் உரிய நேரத்தில் பதிலடி கொடுக்கும் என்று எச்சரித்துள்ளது.

தங்களது நாட்டின் கடற்பகுதியில் அமெரிக்கா நுழைந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது இறையண்மையை மீறிய செயல் என்றும் அந்நாடு கூறியுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - காசி அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

--------------

இந்தியாவுக்கு எதிரான 2வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 147 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

148 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தென்னாப்பிரிக்கா, 17 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

**<<<<The End>>>>**